1968 ஆகஸ்ட் 24]

வதுமோ அல்லது அவர்கள் விரும்புகிற காலம் வரையிலுமோ அந்த இடத்தில் அவர்கள் குடியிருக்கலாம் என்று இந்த அரசு ஆணை பிறப் பித்திருக்கிறது. திரு. ராஜாராம் நாயுடு, எம். எல். சி. அவர்களுக்கு 31—12—1968 வரையில் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

பொட்டப்பட்டிக்கு அண்மையில் அணைக்கட்டு

*90 **வினு.—திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பொட்டப்பட்டிக்கு அண் மையில் அணை கட்டும் திட்டம் தீட்டப்பெற்றது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதுவரை அரசாங்கம் அவ்வணை கட்டும் திட்டத்தை நிறைவேற்ருததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) இச் செயற்குறிப்பு குறித்து தொடக்க ஆய்வு நடத்தப்பட்டது.

(இ) கீழ்க்கண்ட காரணங்களால் இச்செயற்குறிப்பு குறித்து மேலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(1) ஆற்றின் கீழ் உள்ள 10,535 ஏக்கருக்குப் பாசனமளிக்க 210·7 கோடி கன அடி நீர் தேவையாயிருக்க, அடி நிலப்பகுதியில் சராசரி 124·8 கோடி கன அடி நீர் மட்டும் கிடைக்கிறது. தற்போதைய பாச னத்துக்குக்கூட நீர் பற்றுக்குறையாக இருப்பதால், புதிய பரப்பளவிற்குப் பாசன வசதியளிப்பதென்பது இயலாத செயலாகும். (2) மதுரையி லிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் சாலை 3 பர்லாங்குத் தொலைவிற்குப் பாதிக்கப்படும். எனவே, அச்சாலையை வேறு திசையில் திருப்பிவிட வேண்டும். (3) விலை மதிப்புள்ள 868 ஏக்கர் தென்னை, மா, புளியந்தோப்புகள் நீரில் மூழ்கிவிடும். அவற்றைக் கையகப்படுத்த வேண்டும். (4) லக்கரைப்பட்டி என்ற ஒரு சிற்றூரும், அடுத்துள்ள பல ஏரிகளும் நீர்த்தேக்கத்தால் மூழ்கடிக்கப்பட்டு விடும். (5) கீழ்ப்பகுதி குடியா னவர்களும் இச் செயற்குறிப்புக்கு மறுப்பு தெரிவிக்கிருர்கள்.

திரு. பெ. மலேச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறை வேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு 1961-இல் ஆய்வு செய்யப் பட்டது. அமைச்சர் அவர்கள் பல காரணங்களைத் தந்தார்கள். என்ரு லும் இந்தத் திட்டத்தினுல் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் சில பகுதிகள் நன்மை பெறும் என்று கருதுவதால், மீண்டும் மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கேள்விக்கு ஆதரவாக, தொடக்க ஆய்வு என்றுதான் தரப்பட்டிருக்கிறது. மீண்டும் ஆய்வு நடத்த வசதி இருக்கிறது. ஆகவே, இதுபற்றி மீண்டும் புனராலோசனை செய்யப்படும்.

Nagapattinam-Tuticorin Express Buses

* 91 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the express buses are run between Nagapattinam and Tuticorin by the Government State Transport Department ;

(*b*) if so, from what date ; and

(*c*) the fare charged and how it compares with those charged by private operators ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) ஆம்.